O.S. No.12/2023

**06.08.2025**

**வா.சா.1**

**திரு மோகன்குமார்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (2, 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

01.07.1977 தேதியில் என் கொல்லுபாட்டி எழுதிய உயிலின்படி விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் அப்பா பெயர் சத்தியநாராயணன், அவர் உயிருடன் உள்ளார். என் அப்பாவுடன் பிறந்தவர்கள் நீலாவதி, லலிதா, சந்திரா, சகுந்தலா, கிரிஜா ஆகிய 5 பேர். அதில் லலிதா தற்போது உயிருடன் இல்லை. வழக்கில் என் அத்தைகளை பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர்களை அவசியமான தரப்பினர்களாக வழக்கில் சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்ய கூடியது என்றால் தவறு. உயில் பதிவு செய்யப்படாத உயில் என்றால் சரி. தாவா சொத்துக்கள் குறித்து மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 2, 3 பிரதிவாதிகள் புல எண் 183/1A சொத்தை அனுபவித்து

வருகிறார்கள் என்றால் சரிதான். என்னை பொறுத்தவரை ஆக்கிரமிப்பாளர்கள். மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண் 388/1989 இ.ம.எண் 409/1989, நாள் 27.09.1989 ல் நடைபெற்ற வழக்கு பற்றி தெரியுமா என்றால் இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.06 15:54:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.